# வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் 2015

# 2015/03

**இடம்** : வட மாகாண சபையின் குழுக் கூட்ட அறை

**காலம்** :- 26.05.2015 காலை 10.00 மணி

**சமுகமளித்தோர்:-**

- கௌரவ கல்வி அமைச்சர் திரு.த.குருகுலராசா
- கௌரவ திரு.பா.கஜதீபன் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- கௌரவ திரு.ஆ.சி.து.ரவிகரன் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- கௌரவ திரு.இ.இந்திரராசா – வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.அ.பரஞ்சோதி – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ கே.என்.விந்தன் கனகரத்தினம் – வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திருமதி.அனந்தி சசிதரன் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ திரு.ஜி.ரி.லிங்கநாதன் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ திரு.வை.தவநாதன் – வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.எம்.பி.நடராஜ் – வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.இ.இரவீந்திரன் – செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- திரு.எஸ்.உதயகுமார் – மாகாணக் கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்.
- திரு.ராஜா ரணசிங்க – பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.
- திருமதி.வனஜா செல்வரட்ணம் – பணிப்பாளர், கலாசார பண்பாட்டுத் திணைக்களம்.
- எந்திரி.தே.சுரேஸ்குமார்,பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- எந்திரி.எஸ்.விகிர்தன், பாடசாலை வேலைகள் பொறியியலாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- திரு.ஆ.க.சண்முகநாதன் – கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர்.
- திரு.மா.தேவேந்திரன் – பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்), மா.க.அமைச்சு
- திரு.எம்.பிறின்ஸ் லம்பேட் – விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் மூன்றாவது கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு சமுகமளித்தவர்களை வரவேற்று முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களுக்கும் குறிப்பாக புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி வித்தியாவிற்கும் அக வணக்கத்தினை செலுத்தி கூட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். கல்வி ஆலோசனைக் குழுவின் இவ் வருடத்தில் நடைபெற்ற மூன்று கூட்டங்களிற்கும் சமுகமளிக்காதவர்களின் அங்கத்துவம் இரத்துச் செய்யப்பட்டு புதிய அங்கத்தவர்களை தெரிவு செய்ய கோரிக்கை வைக்கப்படுமென கௌரவ கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

**சென்ற கூட்ட அறிக்கையிலிருந்து எழும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.**

- **விளையாட்டு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு தொடர்பானது.**

  விளையாட்டு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புத் தொடர்பான கூட்டம் 22.05.2015 அன்று அமைச்சிலே நடைபெற்றது. விளையாட்டு உத்தியோகத்தர்களின் அதிருப்தி காரணமாக புள்ளி வழங்கும் திட்டத்தில் சிறிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்கான நேர்முகத்தேர்வு ஜூன் 04 ஆந் திகதி நடைபெறவுள்ளது.

- **யா/ஒஸ்மானியா கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பானது.**

  யா/ஒஸ்மானியாக் கல்லூரி அதிபராக தென் இலங்கையைச் சேர்ந்த அதிபர் தரத்தையுடையவர் கடமையேற்றுள்ளார். அதுமட்டுமன்றி இக் கல்லூரி ஆண்கள், பெண்களுக்கான இரு பிரிவுகளாக இயங்குகின்றது.

- **அதிபர் சேவை இடமாற்றம் தொடர்பானது.**

  அதிபர் சேவை இடமாற்றங்கள் தொடர்பாக வலயக் கல்விப் பணிமனைகளில் இது சம்பந்தமாக ஆராய்ந்து மத்திய கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியுயர்வு கிடைத்த அதிபர்களுக்கு பொருத்தமான பாடசாலைகளை வழங்குவதற்கு ஏதுவாக அடுத்த மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் நேர்முகத்தேர்வு நடத்தப்படவுள்ளது. 8ஆம் திகதி கோட்டக்கல்விப் பணிப்பாளர்களுக்கான நேர்முகத்தேர்வும் 9ஆம் திகதி அதிபர்களுக்கான நேர்முகத் தேர்வும் நடைபெறவுள்ளது. 158 1AB, 1C பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடங்கள் காணப்படுகின்றது. கௌரவ மாகாணசபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் அவர்கள் அதிபர் வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளின் விபரங்கள் உள்ளூர் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்மென்ற கோரிக்கைக்கு செயலாளர் அவர்கள் அனைத்து உள்ளூர்ப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதாக தெரிவித்தார். இதுவரை காலமும் 04/2008 சுற்றுநிருபத்தின் பிரகாரம் அதிபர் நியமன புள்ளியிடல் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்) தலைமையில் ஒரு குழுவினை அமைத்து முதுமுறை, கல்வித் தகைமைகள் தொடர்பாக ஆராயப்பட்டு புதிய சுற்றுநிருபம் தயாரிக்கப்பட்டு அதற்கமைவாக அதிபர் நியமனம் மேற்கொள்ளப்படவுள்ளதாக செயலாளர் தெரிவித்தார். 1AB, 1C பாடசாலைகளுக்கு அதிபர் வகுப்பு 1 ஐச் சேர்ந்த அதிபர்களை ஜூலை 1 ஆம் திகதியும் மற்றைய தர அதிபர்களுக்கு செப்ரெம்பர் 1ஆம் திகதியும் பொருத்தமான பாடசாலைகள் வழங்கப்படும். வ/மகாறம்பைக்குளம் அ.த.க. பாடசாலைக்கும் மு/கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலைக்கும் அதிபர்களை நியமிக்க வேண்டுமென கௌரவ மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். கௌரவ மாகாணசபை

உறுப்பினர் G.T. லிங்கநாதன் அவர்கள் இடமாற்றத் திகதியை நிர்ணயித்தால் அதனை மாற்ற வேண்டாமென கோரிக்கை வைத்தார். வலய ரீதியாக வெற்றிடமுள்ள பாடசாலைகளுக்கு செப்ரெம்பர் மாதம் வரை காத்திருக்காது விரைவாக இடமாற்றங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ கல்வி அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

- **தீவக கல்வி வலயத்தில் சேவைக் காலத்தை முடித்தவர்களின் இடமாற்றம் தொடர்பானது.**

  தீவக கல்வி வலயத்திற்கு விஞ்ஞானப் பட்டதாரிகள் நியமிக்கப்படவேண்டியுள்ளதால் விஞ்ஞானப் பட்டதாரிகளின் நியமனத்தின் போது முன்னுரிமை வழங்கப்படும். சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் அதிகமாகவும் சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவும் காணப்படுவதனால் வலயக் கல்விப் பணிப்பாளர் அதனை சீர் செய்யுமாறு செயலாளரினால் அறிவுறுத்தல் கடிதம் அனுப்பப்படல் வேண்டும்.

- **தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பானது.**

  தொண்டராசிரியர்கள் தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் தயார் செய்யப்பட்டு கல்வி இராஜாங்க அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை விடுபட்ட தொண்டராசிரியர்கள் 646 பேரும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் 167 பேரும் பகுதி நேர ஆசிரியர்கள் 62 பேரையும் சேர்த்து மொத்தமாக 890 பேரின் பெயர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.உடற்கல்வி டிப்ளோமா செய்த 82 பேர், மீன்பிடியியல் டிப்ளோமா செய்த 30 பேர், ஆங்கில டிப்ளோமா செய்த 42 பேருடைய பெயர் விபரங்களும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- **வ/விபுலானந்த கல்லூரி அதிபர் திரு.கந்தையா தனபாலசிங்கம் SLPS – I அவர்களது ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பானது**

  வ/விபுலானந்தா கல்லூரியின் அதிபர் விசாரணை முடிவடைந்துள்ளது. விசாரணை அறிக்கை கிடைத்ததும் அதனை மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு விசாரணை நடத்துவதற்காக அனுப்பப்படும். தற்காலிக இணைப்பை இரத்துச் செய்யும்படி வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அவர் தற்போது கட்டாய லீவில் நிற்கின்றார். மீண்டும் வழக்கு 27.05.2015 அன்று நடைபெறவுள்ளது.

- **யா/கதீஜா பெண்கள் கல்லூரியை மீள ஆரம்பித்தல் தொடர்பானது.**

  யா/கதீஜா பெண்கள் கல்லூரி மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு ஏழு வருடமாக விஞ்ஞான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாத காரணத்தினால் ஒரு பிள்ளையும் கணித, விஞ்ஞான பாடத்துறையை படிக்கக்கூடிய பெறுபேற்றை கொண்டிருக்கவில்லை –**கௌரவ திருமதி.அனந்தி சசிதரன், மாகாணசபை உறுப்பினர்.**

  யா/நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் மேலதிகமாக உள்ள விஞ்ஞான ஆசிரியரை யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- **மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையை பெண்கள் வித்தியாலயமாக்குதல்.**

**மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையை பெண்கள் வித்தியாலயமாக்குதல் தொடர்பாக இரண்டாம் தவணை விடுமுறையில் கூட்டங்களை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

- மு/மாமடு பழம்பாசி அ.த.க. பாடசாலைக்கு ஆசிரியர் ஒருவரை நியமிக்க வேண்டும். – **கௌரவ ஆ.சி.து.ரவிகரன் – மாகாணசபை உறுப்பினர்.**

  பேருந்து போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் அதே பாடசாலையின் பெயரில் பல பாடசாலைகளை இணைத்து ஒரு கொத்தணிப் பாடசாலைகளாக நடத்த முடியும் என கௌரவ கல்வி அமைச்சர் தெரிவித்தார். இல்லாதுவிடின் பேருந்து சேவை நடத்துவதன் மூலம் ஆசிரியர்களை பாடசாலைக்கு அனுப்ப முடியும். பேருந்துக்களைப் பெறுவதற்கு இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பேருந்துக்களை பெற்றுக்கொள்ள வவுனியா மாநகரசபைக்கு கோரிக்கை வைக்க வேண்டும். இல்லாதுவிடின் பிள்ளை ஒன்று பாடசாலைக்கு சமுகமளித்தால் நாளொன்றிற்கு குறிப்பிட்ட தொகை வழங்கப்படுமென தெரிவிக்கலாம் என செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

- யா/புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கு பேருந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். – **கௌரவ கே.என்.விந்தன் கனகரத்தினம் – மாகாணசபை உறுப்பினர்.**

- **யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.**

  யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் உயர்தரப் பிரிவை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படுகின்றது.

- மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையில் அனுமதி பெறாமல் க.பொ.த (சா/த) உம் ஆங்கில மொழிமூல வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சிபாரிசு செய்யவில்லை. அனுமதி பெறப்படாது பாடசாலைகளை தரமுயர்த்தக் கூடாது என பாடசாலை அதிபர்களுக்கு கடிதம் அனுப்பப்பட வேண்டும்.

- யா/புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம் நீண்டகாலமாக இயங்காதிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.– **கௌரவ கே.என்.விந்தன் கனகரத்தினம் – மாகாணசபை உறுப்பினர்**

## கலாசாரம் தொடர்பானது

- **நல்லூர் மந்திரிமனை தொடர்பாக எமது பழைமையை பேணிப் பாதுகாத்தல் தொடர்பானது.**

  நல்லூர் மந்திரி மனைதொடர்பாக வழக்கு இருப்பதனால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாக கௌரவ அவைத் தலைவர் தெரிவித்ததாக கலாசாரப் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது.

- **பண்டாரவன்னியன் சிலை அமைப்பது தொடர்பாக**

  வட மாகாண அமைச்சர் வாரியப்பத்திரம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அனுமதி பெறுவதற்கு முன்னால் கரைதுறைப்பற்று பிரதேச சபையினுடைய அனுமதி பெறப்பட வேண்டும். இது தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு கடிதம் அனுப்புதல் வேண்டும்.

- **வடக்கு மாகாண கல்வி முறைமை மீளாய்வு, சிபாரிசுகள் அமுல்ப்படுத்தல்.**

  **(RIMP), (LMDMU)**

  ஐந்து விடயங்களுக்கு வட மாகாண அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவையாவன

  - **தமிழ் மொழி மூலமான கல்வி நிறுவகம்**

    வட மாகாண அமைச்சர் வாரியப்பத்திரம் தயாரிக்கப்பட்டு பிரதம செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றதும் வட மாகாண ஆளுநருக்கு சமர்ப்பிக்கப்படும். தமிழ் மொழி மூலமான கல்வி நிறுவகமாக இது செயற்படும். தேசிய கல்வி நிறுவகத்தின் ஒத்திசைவுடன் ஆரம்பிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

  - **RIMP**

    மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட சிபாரிசுகளை கண்காணிப்பதற்கும் அமுல்ப்படுத்துவதற்குமாக ஒரு குழுவினை அமைத்துள்ளோம். ஆனால் இதுவரை உத்தியோகபூர்மான ஒரு கூட்டத்தையேனும் கூட்டவில்லை. இதற்கு ஓய்வுபெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்னேஸ்வரன் தலைமை தாங்குகின்றார். இக் குழுவில் 29 அங்கத்தவர்கள் அங்கம் வகிக்கின்றார்கள். இதில் அரைவாசிப்பேர் ஒவ்வொரு வருடமும் மாற்றியமைக்கப்படுவர்.

  - **கற்றல் உபகரணங்களின் அபிவிருத்திக்கும் முகாமைத்துவத்திற்குமான பிரிவு**

    இதற்குரிய அலகினை மாகாணக் கல்வித் திணைக்களத்தில் ஆரம்பித்துள்ளனர். அது நடைபெற்று வருகின்றது.

  - **பதிலீட்டு ஆசிரியர் அணி உருவாக்குதல்**

    அதாவது வட மாகாணத்திலுள்ள 34 கோட்டத்தில் ஒவ்வொரு கோட்டத்திலும் 60-65 வயதிற்கிடைப்பட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர்களை ஒரு குழுவாக தெரிந்து வைத்திருத்தல். குறிப்பாக கணிதம், விஞ்ஞானம்,தமிழ்,ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களை கொண்ட அணியினை உருவாக்கி வைத்திருத்தல். நீண்ட கால விடுப்பில் உள்ள ஆசிரியர்களிற்குப் பதிலாக இவர்களைப பயன்படுத்த முடியும். இவர்களிற்குரிய கொடுப்பனவு விடுபட்ட ஆசிரியர்களின் சம்பளத்திலிருந்து எடுத்து வழங்க முடியும். இது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்களிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

- **வட மாகாணத்தில் பரிந்துரை செய்யப்பட்ட புதிய கல்வி முறைமையை அறிமுகப்படுத்தல்.**

  வட மாகாணத்தில் பரிந்துரை செய்யப்பட்ட புதிய கல்வி முறைமையை அறிமுகப்படுத்தும் வகையில் தென்மராட்சி, துணுக்காய் ஆகிய வலயங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இது ஒரு முன்னோடித் திட்டமாக அமையும். இதுவரையில் 135 செயற்பாடுகள் வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன.

- **2015 ஆம் ஆண்டுக்கான TSEP, PSDG,CBG ஆகிய நிதி ஒதுக்கீடுகளின் மீளாய்வு**

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பாடசாலைகளின் கட்டட வேலைகள் குறை வேலைகளாக உள்ளதாக கௌரவ மாகாணசபை உறுப்பினர் ஆ.சி.து. ரவிகரன் தெரிவித்தார். மு/இரணைப்பாலை றோ.க.த.க. பாடசாலை, மு/உடுப்புக்குளம் அ.த.க.பாடசாலை, மு/முறிப்பு அ.த.க.பாடசாலை, மு/பாரதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் குறைவேலைகள் செய்து முடிக்கப்பட வேண்டும். இது 2016 PSDG திட்டத்தினுள் சேர்க்கப்படும். முடிக்கப்படாத நான்கு பாடசாலைக் கட்டடங்களுக்கும் மதிப்பீடு (Estimate) செய்யும்படி செயலாளர் கேட்டுக்கொண்டார். மு/உடையார்கட்டு மகா வித்தியாலயத்தின் குறைவேலையாக உள்ள கட்டடம் இடித்து அகற்றப்பட வேண்டுமென கௌரவ கல்வி அமைச்சர் தெரிவித்தார். 2015 ஆம் ஆண்டிற்குரிய PSDG திட்டத்தில் 31 வேலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றிற்கான கேள்விகள் (Tenders) கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. VAT Payment இற்காக பிடித்துவைக்கப்பட்ட 30Mn இவ் வருடம் கொடுப்பனவு செய்யத் தேவையில்லாத காரணத்தினால் அது மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், மு/விசுவநாதர் வித்தியாலயம், வ/வேடர்மகிழங்குளம் அ.த.க. பாடசாலை, வ/கனகராயன்குளம் ஆரம்பப் பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது. மு/சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலைக்கு கட்டடம் அமைக்கப்பட வேண்டுமென கௌரவ ஆ.சி.து.ரவிகரன், மாகாணசபை உறுப்பினர் கோரிக்கை வைத்தார். கிளி/இராமகிருஷ்ணா வித்தியாலய கட்டட வேலையையும் மு/சுதந்தரபுரம் அ.த.க.பாடசாலை கட்டட வேலையையும் 2016 ஆம் ஆண்டிற்கான TSEP திட்டத்தினுள் உள்ளடக்கும்படி கௌரவ கல்வி அமைச்சர் கேட்டுக்கொண்டார். வ/கோவில்குளம் இந்துக் கல்லூரிக்கு கட்டடம் தேவையென கௌரவ ஜி.ரி.லிங்கநாதன், மாகாணசபை உறுப்பினர் அவர்களும் வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்திற்கு கட்டடம் தேவையென கௌரவ எம்.பி.நடராஜ், மாகாணசபை உறுப்பினர் அவர்களும் கேட்டுக்கொண்டனர். மன்/தேவன்பிட்டி றோ.க.த.க. பாடசாலைக்கு ஆரம்பப்பிரிவிற்கு கட்டடம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென கௌரவ கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

## 26.05.2015 ஆந் திகதிய கூட்டத் தீர்மானங்கள்

- **ஆசிரியர் நியமனம்**

புதிய ஆசிரிய நியமனமாக 247 பட்டதாரிகளை நியமித்துள்ளனர். எல்லாமாக 272 பேர் நியமிக்கப்பட வேண்டும். நியமனம் வழங்கப்பட்டவர்கள் சில நேரங்களில் கடமையைப் பொறுப்பேற்க மாட்டார்கள். ஆகவே அவர்களின் இடத்திற்கு புள்ளியின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.புதிய நியமனங்களை வழங்கும் பொழுது ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளை கவனத்தில் எடுக்கும்படி கௌரவ ஆ.சி.து.ரவிகரன், மாகாணசபை உறுப்பினர் கேட்டுக்கொண்டார். தமிழ்,புவியியல்,வர்த்தகம்,பொருளியல் ஆகிய ஆசிரியர்களை கஷ்டமான வலயங்களிற்கு மட்டும் இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இக் கடிதம் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. அந்த விபரங்கள் தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளதாக செயலாளர் தெரிவித்தார். தற்பொழுது மத்திய கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக உள்ளவர்கள் கற்பிக்க வர விரும்பினால் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அவர்கள் ஆசிரிய சேவைக்கு மாற விரும்பினால் அவர்களிற்கான பதவி மாற்றி வழங்கப்படும்.

- **புத்தளத்தில் இயங்கும் வட மாகாணப் பாடசாலைகள் பற்றியது**

இது பற்றி குழுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இந்த வருட இறுதியில் அவர்களுடன் கலந்துரையாடி பாடசாலைகளை புத்தளத்திற்கு கையளிக்கும் நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

- **ஆசிரிய இடமாற்ற சபையில் 15% இற்கு மேற்பட்ட ஆசிரியர்களை உறுப்பினர்களாக கொண்ட ஆசிரிய சங்கமே பங்குபற்ற முடியும்**

கலாநிதி சர்வேஸ்வரன் அவர்கள் இது பற்றி ஆய்வு செய்கின்றார். 15% இற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் அங்கம் வகிக்காத ஆசிரிய சங்கங்கள் இடமாற்ற சபையில் அங்கம் வகிக்க முடியாது. புதிய இடமாற்றக் கொள்கையில் இது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை அவர்களை சந்தித்து கையளிக்க உள்ளதாக செயலாளர் தெரிவித்தார்.

- **ஆசிரிய இடமாற்றக் கொள்கை**

2015 ஜூன் 8 ஆம் திகதி 11.00 மணிக்கு ஆசிரிய இடமாற்றக் கொள்கை தொடர்பாக கூட்டம் நடைபெறவுள்ளது. கௌரவ மாகாணசபை உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

- **1000 பாடசாலைகள் திட்ட பௌதிக முன்னேற்றம் தொடர்பான பரிசீலனை**

1000 பாடசாலைகள் திட்டம் தொடர்பாக ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் அவர்கள் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட அமைப்புக்களை மாற்ற வேண்டாம் என கோரிக்கை வைக்கப்பட்டது. அது சுற்றுநிருபமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இறுதியாக அதே பாடசாலையில் ஆரம்பப்பிரிவினை புதிய பாடசாலையாக ஆரம்பிக்க அனுமதி வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது. இதற்குரிய அனுமதிக்கு மத்திய கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். ஆரம்பப் பிரிவினை

ஆரம்பிப்பதற்கு சில பாடசாலைகள் கோரிக்கை வைத்துள்ளன. வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவினை மாகாண அமைச்சிற்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு தொழில்நுட்ப ஆய்வுகூடத்தினை அமைப்பதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது. திறப்பதற்கு ஆயத்தமாக 56 தொழிநுட்ப ஆய்வுகூடங்கள் உள்ளதாக செயலாளர் தெரிவித்தார். மாகாணசபை உறுப்பினர்களைக் கொண்டு ஜூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வலயக் கல்விப் பணிப்பாளர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தொழினுட்ப ஆய்வுகூடங்கள் திறக்கப்படும் திகதியினை அறிவித்தால் அதற்குரிய பொருட்கள் மத்திய கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்படும். பொருட்கள் கிடைக்காவிட்டாலும் உடனடியாக திறக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. சில இடங்களில் தொழினுட்ப ஆய்வுகூடங்களிற்கான மூன்று அவத்தை (Three Phase) மின்சார இணைப்பு பெறப்படவில்லை. உடனடியாக இலங்கை மின்சார சபையிடமிருந்து மதிப்பீட்டினை (Estimate) பெற்று தங்களது பணத்தினை செலுத்திய பின்னர் அது தொடர்பான விபரங்களை அனுப்பினால் பணம் மீளளிப்பு செய்யப்படும் என செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

## வேறு விடயங்கள்

- **மாணவர்களின் பாதுகாப்பு**

  மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பாடசாலைகளிற்கு அறிவித்து விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாணவர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக பெற்றோர்களை அழைத்து கலந்துரையாடி குழுக்களை அமைத்து மாணவர்களின் பாதுகாப்பினை அதிபர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதன் பிறகு தொடர் நடவடிக்கையாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு நடைபவனியை எல்லோரும் சமநேரத்தில் நடத்த வேண்டும்.
- தமிழ்த்தின போட்டிகளை மாவட்ட மட்ட போட்டிகளாக நடத்த வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளார். வலய ரீதியாக போட்டிகளை நடத்தாது மாவட்ட ரீதியாக போட்டிகளை நடத்த வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.
- பாடசாலைகளில் ஜனாதிபதி,பிரதம மந்திரி,முதலமைச்சர்,கல்வி அமைச்சர் ஆகியோரின் படங்களை வைத்தல் வேண்டும்.
- பாடசாலைகளில் கிறிக்கெற்,வலைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களை பிரதேச செயலகங்களில் உள்ள விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களைக் கொண்டு பயிற்றுவிக்கப்பட வேண்டும். – கௌரவ திருமதி.அனந்தி சசிதரன், மாகாணசபை உறுப்பினர்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நண்பகல் 12.00 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.

**இ.இரவீந்திரன்**
**செயலாளர்.**

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்